## திருச்செங்கோடு நகராட்சி

## 29.04.2022 அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தனாரீஸ்வரர் வைகாசி விசாக தேர்த்திருவிழா 2022ஐ முன்னிட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை ஓரங்களிலும் மற்றும் அரசு புறம்போக்கு இடங்கள் முதலியவற்றில் தற்காலிக கடை வைப்பவர்களிடம் தேர்திருவிழா தொடங்கும் நாளிலிருந்து 15 நாட்கள் வரையிலும், நாலுகால் மண்டபத்திற்கு அருகில் உள்ள இடங்களில் வைக்கப்படும் கடைகளுக்கு ஆடி பதினெட்டு வரையிலும் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு 28.04.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலத்தில், ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. பொது ஏலத்தில் கீழ்கண்ட நபர்கள் கலந்துகொண்டு உச்ச கேள்வி கோரியுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது:-

| ஏலதாரர் பெயர்/ முகவரி | உச்ச கேள்வி தொகை (ரூ) |
|---|---|
| 1).திரு.மு.அருள் த/பெ முத்துசாமி,<br>14எ, பழைய மாரியம்மன் கோவில் தெரு,<br>வி.என்.பாளையம், சங்ககிரி. | ரூ.10,65,000/– |
| 2) .திரு.ஜெ.விஜயகுமார் த/பெ ஜெயநாதன்,<br>20, கச்சேரி தெரு, வேலூர் ரோடு, திருச்செங்கோடு. | ரூ.10,70,000/– |

**அலுவலகக் குறிப்பு :**

அருள்மிகு அர்த்தனாரீஸ்வரர் வைகாசி விசாக தேர்த்திருவிழா 2022ஐ முன்னிட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் தற்காலிக கடை வைப்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு உச்ச கேள்வியாக ரூ.10,70,000/– என திரு.ஜெ.விஜயகுமார் என்பவர் கோரியுள்ளார். இது சென்ற முறை ஏலத்தொகை ரூ.9,12,000/–யை காட்டிலும் ரூ.1,58,000/– கூடுதலாக சென்றுள்ளதால் மேற்படி உச்ச கேள்வியை உறுதி செய்யலாம்.

**கோப்பு எண். 2086/2022/அ3**

**நகர் மன்ற தீர்மானம் எண்.135 , நாள்.29.04.2022.**

திரு.ஜெ.விஜயகுமார் என்பவரின் உச்ச கேள்வி தொகை ரூ.10,70,000/– உறுதி செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

கீழ்கண்ட பணியை ரூ.2.50 இலட்சத்திற்கு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள பணியின் அவசரம் அவசியம் கருதி 12.04.2022 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி, 27.04.2022 அன்று நடைப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான சந்தைப்பேட்டை வார சந்தையை மேம்படுத்துதல் பணிக்கு தனியார் கலந்தாலோசகர் மூலம் மண் பரிசோதனை மற்றும் வடிவமைப்பு செய்து மதிப்பீடுகள் தயார் செய்யும் பணி | 2,50,000/– | 1. SMART BUILDERS, TIRUPPUR<br><br>2. JANANAM DESINGERS & BULIDERS, DINDIGAL | (-) 0.15 % குறைவு<br><br>(+)0.10 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(—)0.15% குறைவாக கொடுத்துள்ள SMART BUILDERS, TIRUPPUR என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**<u>கோப்பு எண்.2744/2022/இ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.136 , நாள்.29.04.2022.</u>**

மதிப்பீட்டை விட(—)0.15% குறைவாக கொடுத்துள்ள SMART BUILDERS, TIRUPPUR என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்க்கப்பட்டது.

**பொருள் எண்.3**

கீழ்கண்ட பணியை ரூ.1.00 இலட்சத்திற்கு வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள பணியின் அவசரம் அவசியம் கருதி 12.04.2022 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி, 27.04.2022 அன்று நடைப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான சந்தைப்பேட்டை வார சந்தை பகுதியில் அறிவுசார் மையம் (Knowledge centre) அமைக்க தனியார் கலந்தாலோசகர் மூலம் மண் பரிசோதனை மற்றும் வடிவமைப்பு செய்து மதிப்பீடுகள் தயார் செய்யும் பணி | 1,00,000/— | 1. SMART BUILDERS, TIRUPPUR<br>2. JANANAM DESINGERS & BULIDERS, DINDIGAL | (-) 0.10 % குறைவு<br>(+)0.20 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(—)0.10% குறைவாக கொடுத்துள்ள SMART BUILDERS, TIRUPPUR என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**<u>கோப்பு எண்.2811/2022/இ1</u>**

**<u>நகர் மன்ற தீர்மானம் எண்.137 , நாள்.29.04.2022.</u>**

மதிப்பீட்டை விட(—)0.10% குறைவாக கொடுத்துள்ள SMART BUILDERS, TIRUPPUR என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்க்கப்பட்டது.

**பொருள் எண்.4**

கீழ்கண்ட பணியை ரூ.30,000/— வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள பணியின் அவசரம் அவசியம் கருதி 12.04.2022 அன்று நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி, 27.04.2022 அன்று நடைப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு :-

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கொடுத்துள்ள விலை விகிதம் % |
|---|---|---|---|
| திருச்செங்கோடு நகராட்சிக்கு சொந்தமான அனிமூர் உரக்கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை கான்டூர் சர்வே மூலம் அளவீடு செய்யும் பணி | 30,000/— | 1. திருகே.செந்தில்முருகன் , திருச்செங்கோடு<br>2. ஜெயம்மாருதி எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் | (-) 0.10% குறைவு<br>(+)0.25 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட(—)0.10% குறைவாக கொடுத்துள்ள திரு.கே.செந்தில்முருகன், திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

**கோப்பு எண். 2913 /2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.138, நாள்.29.04.2022.**
மதிப்பீட்டை விட(—)0.10% குறைவாக கொடுத்துள்ள திரு.கே.செந்தில்முருகன், திருச்செங்கோடு அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை ஏற்க்கப்பட்டது.

**பொருள் எண்.5**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, CHB காலனி தெரு எண்.4, பகுதியில் சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் நடந்து செல்ல மற்றும் வாகன போக்குவரத்திற்கு மிகவும் சிரமம்படுகின்றனர். எனவே, மேற்கண்ட பகுதியில் உள்ள சிறுபாலத்தை (Culvert) அகற்றிவிட்டு புதியதாக (RCC Culvert) சிறுபாலம் (Culvert) அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/—க்கு மன்றத்தின் அனுமதிக் கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 2954/2022/இ1**
**நகர் மன்ற தீர்மானம் எண்.139, நாள்.29.04.2022.**
அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**ஒம்/ நளினிசுரேஷ்பாபு,**
**நகர் மன்ற தலைவர்,**
**திருச்செங்கோடு நகராட்சி.**

//உண்மை நகல்//

ஆணையாளர்,
திருச்செஙகோடு நகராட்சி.